<u>முதல் மற்றும் இரண்டாம் திருப்புதல் தேர்வுகள்</u>

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 00126/ஆ4/2022, நாள். 31.01.2022.**

பொருள் 2021–2022 –ஆம் கல்வியாண்டில் பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான முதல் / இரண்டாம் திருப்புதல் தேர்வுகள் – திருப்புதல் தேர்வுகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட தேர்வுக்கால அட்டவணைகள் மற்றும் பாடத்திட்டம் அனுப்பி வைத்தல் – தேர்வுகள் நடத்திடுவது குறித்து தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்குதல் – சார்பாக.

பார்வை

1. சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 02826 / எச்.1 / 2021, நாள். 28.12.2021, மற்றும் 31.01.2022.
2. இவ்வலுவலக ந.க.எண். 3866/ஆ4/2021–2022, நாள்.28.12.201.
3. சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 12/மந்தணம்/ 2021, நாள். 29.12.2021.

#######

பார்வை 1–ல் காணும் கடிதப்படி, 2021–2022 –ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கான முதல் மற்றும் இரண்டாம் திருப்புதல் தேர்வுகளுக்காக கால அட்டவணை முறையே 19.01.2022 மற்றும் 21.03.2022 ஆகிய நாட்களில் தொடங்குவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கொரோனா தொற்றின் காரணமாக 19.01.2022 முதல் 31.01.2022 வரையிலான நாட்களில் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டதன் காரணமாக திருப்புதல் தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டது.

தற்போது முதல் மற்றும் இரண்டாம் திருப்புதல் தேர்வுகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட தேர்வுக்கால அட்டவணைகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இத்தேர்வுகள் குறித்த விபரத்தினை வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் தங்களது ஆளுகைகளுக்குட்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் வாயிலாக அனைத்து வகை பள்ளி மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அறியும் வகையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். முதல் திருப்புதல் தேர்வுகள் நடைபெறும் நாட்களில் உள்ளாட்சித் தேர்தலுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறும் தினங்களில் பள்ளித் தலைமையாசிரியர்கள் பயிற்சி வகுப்புகளுக்கு செல்லாத இதர ஆசிரியர்களைக் கொண்டு தேர்வினை எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வகையில் சுமூகமாக நடத்திட உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவும், அனைத்து வகை தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திற்கு சென்று தங்கள் பள்ளிக்குரிய வினாத்தாட்கள் போதுமானதாக உள்ளதா என சரிபார்த்து கொள்ளுமாறு அனைத்து தலைமைஆசிரியர்களும் மீள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பார்வை 3–இல் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளை பின்பற்றி திருப்புதல் தேர்வுகளுக்கான விடைத்தாட்களை திருத்தும் பணியினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்புக்கு – 9443099905 ./ 8825819484

//ஒப்பம்//
(க.முனுசாமி)
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

இணைப்பு – பார்வைக் கடித நகல்

பெறுநர்
அனைத்துவகை உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள். வேலூர் மாவட்டம்.
நகல்
மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும்
தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் அனுப்பலாகிறது.